40. கல்வி

391. *கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
நிற்க அதற்குத் தக

கற்க வேண்டிய நூல்களை
கண்டிப்பாகப் பிழையின்றி கசடறக்
கற்க வேண்டும் ! அதன் பின்
கற்றுக் கொண்டபடி நடத்தல் வேண்டும் !

392. *எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்*
கண்ணென்ப வாழும் உயிர்க்கு

எண் சார்ந்த கல்வியும்
எழுத்து சார்ந்த கல்வியும்
எப்போதும் அறிவுக் கண் போன்றதாம்
எங்கும் வாழும் மனித உயிர்க்கு !

393. *கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு*
புண்ணுடையர் கல்லா தவர்

கண்ணுடையவர் என்பவர்கள் கல்வி கற்றவர்களே !
கல்வி கற்காதோர் முகத்தில்
கண்கள் இரண்டு இருந்தாலும் – அவை
கண்கள் அல்ல புண்களே !

394. *உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்*
அனைத்தே புலவர் தொழில்

பழகும் போது மிக மகிழ்வோடு பழகி, பழகிய நினைவுகள்
பசுமையாக என்றும் நினைவில் நின்று
பிரியும் போது வருத்தமுடன்
பிரியா விடை பெறுவது அறிஞர் செயல் !

395. *உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்*
கடையரே கல்லா தவர்

ஏகபோக செல்வம் உடையவர் முன்
ஏழை எளியோர் இல்லாதோர்
ஏக்கத்தோடு நிற்பது போல்
ஏங்கிப் பணிந்து கற்றவர் முன் நின்று
ஏற்கும் கல்வியாளர் உயர்வார் ! அக்கல்வியை
ஏற்காதவர் கடை நிலை மாந்தர் !

396. *தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்*
கற்றனைத் தூறும் அறிவு

தோண்டத் தோண்ட கேணியில்
தோதாய் ஊறும் நீர் ! அது போல
தொடர்ந்து நூல்களை படிக்கப் படிக்க
தொடர்ச்சியால் சுரக்கும் மாந்தர்க்கு அறிவு !

397. *யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்*
சாந்துணையுங் கல்லாத வாறு

யாதும் ஊரே எந்நாடும் எம் நாடே
யாங்஘னுமே கல்வி கற்றால் !
சர்வ தேசமும் கற்றோருக்க சிறப்பு தரும் போது
சாகும் வரை கல்வி கற்கலாமே !

398. *ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்*
கெழுமையும் ஏமாப் புடைத்து

ஒரு தலைமுறையில்
ஒருவன் பெறும் கல்வி அறிவினால்
ஒருங்கே வரும் பெருமையும் புகழும்
ஒட்டி வரும் ஏழு பிறப்பிலும் !

399. *தாமின் புறுவ துலகின் புறக்கண்டு*
காமுறுவர் கற்றறிந் தார்

கற்பதனால் தாம் பெறும் இன்பம்
கண்டுணரும் போது –
கல்வியினால், மேலும் மகிழ்வதைக்
கல்விதனை உலகமே கொண்டாடும்போது
கல்விதனைக் காதலிப்பார் கற்றறிந்தவர் !

400. *கேடில் விழுச் செல்வங் கல்வி யொருவற்கு*
மாடல்ல மற்றை யவை

குன்றாத கல்வி ஒன்றே அழியாத
குறைவற்ற செல்வமாகும் !
அதற்கொப்ப சிறப்பினை பெற்ற மற்ற செல்வம்
அங்஘னம் எதுவும் இல்லை !

41. கல்லாமை

401. *அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய*
நூலின்றிக் கோட்டி கொளல்

நூல் பல கற்காமலேயே
நூலோர் நிரம்பிய அறிவுச்சபையில்
உரையாடுவது என்பது ஆடுகளத்தை
உருவாக்காமல் பகடைக் காயை
உருட்டிப் போட்டு ஆடுவது போன்றது !

402. *கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்*
இல்லாதாள் பெண்காமுற் றற்று

கல்வியறிவு இல்லாத ஒருவன்
கற்றோர் சபையில் ஒன்றைச் சொல்ல விரும்புவது –
இரண்டு முலைகளும் இல்லாத பெண்
இன்பத்தை விரும்புவது போன்றது !

403. *கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்*
சொல்லா திருக்கப் பெறின்

கல்லாதவரும் மிக நல்லவரே !
கற்றவர் முன் ஒன்றும் சொல்லாமல்
கட்டுப்பாட்டுடன் அமைதியாக காலம்
கடத்தும் வரை !

404. *கல்லாதான் ஒட்பங் கழியநன் றாயினுங்*
கொள்ளார் அறிவுடை யார்

கல்வி கற்காதவனுக்கு இயற்கையாகவே அறிவுக்
கதிர்கள் ஒளிர்ந்தாலும், நுட்பத்தை
கண்டுணர்ந்தாலும், மற்ற பிற கல்வி
கற்றோர், அறிவுடையோர் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் !

405. *கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து*
சொல்லாடச் சோர்வு படும்

கல்லாத ஒருவன் மேதையைப் போல்
கலையாத வேடம் போட்டாலும்
கற்றுத் தேர்ந்த அறிஞர்களிடம்
கலந்துரையாடும்போது வேடம் கலைந்து விடும் !

406. *உளரென்னும் மாத்திரைய ரல்லால் பயவாக்*
களரனையர் கல்லா தவர்

கல்லாதவர் உயிரோடு உளர் என்று
கருதலாமே தவிர மற்றபடி அவர்கள்
பயிர் செய்ய முடியாத களர் நிலத்தைப்போல்
பயன்படாதவர்களே என்றும் !

407. *நுண்மாண் நுழைபுல மில்லான் எழினலம்*
மண்மாண் புனைபாவை யற்று

நுட்பமான நூல்கள் பல கற்று ஆராயும்
நுண்ணிய அறிவில்லாதவர்களின் அழகிய தோற்றம்
நுடங்கும் அழகிய வண்ண மண் பொம்மை போன்றதே !

408. *நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே*
கல்லார்கண் பட்ட திரு

கல்லாதவர்களிடம் ஓடோடி வந்து
களிப்புடன் சேர்ந்த செல்வம்
நல்லோர்களிடம் உள்ள வறுமையை விட
நிறைந்த துன்பத்தைத் தரக் கூடியது !

409. *மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்*
கற்றா ரனைத்திலர் பாடு

மேட்டுக்குடி என்று சொல்லப்படுபவர்கள்
மேம்பட்ட கல்வியைக் கல்லாதவராயின் –
தாழ்குடி என்று சொல்லப்படுகின்ற குடியில் பிறந்து
"தாழாத கல்வி" கற்றவர்களுக்கு ஒப்பாக மாட்டார் !

410. *விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்*
கற்றாரோ டேனை யவர்

விரிவான அறிவு நூலைக் கற்று
விளங்கிய அறிஞர்கட்கும்
விளங்காத கல்லாதவருக்கும் வேற்றுமை
விலங்கிற்கும் மனிதருக்கும் உள்ள
வித்தியாசமே !

42. கேள்வி

411. *செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வஞ்*
செல்வத்து ளெல்லாந் தலை

செழுமையான கருத்துகளை
செவி வழியாக கேள்விப்படுவதே
செவிச் செல்வம் ! அச்செல்வமே
செல்வத்துள் எல்லாவற்றிலும் தலையாய செல்வமாகும் !

412. *செவிக்குண வில்லாத போழ்து சிறிது*
வயிற்றுக்கும் ஈயப் படும்

செழுமையான கருத்துக்களை
செவி வழியாக கேள்விப்படும்
செவி இன்பம் கிடைக்காத போது தான்
வயிற்றுப் பசி பிறந்து அதற்காக
வயிற்றுக்கும் சிறிதேனும் உணவு வழங்கப்படும் !

413. *செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்*
ஆன்றாரோ டொப்பர் நிலத்து

செவி வழியாகக் கேள்விப்படும்

செவி உணவாகிய கேள்வியறிவு
செம்மையாக உடையவர்கள்
வேள்வித் தீயில் அவிந்த உணவுகளை
வேதாகம பிரசாதமாய் உண்ணும்
வேத விற்பன்னர்களுக்கு ஒப்பாவர் !

414. *கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்*
கொற்கத்தின் ஊற்றாந் துணை

தானே கற்கவில்லை எனினும்
தகுதி வாய்ந்த கற்றோரிடம் சென்று
தகவல்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டால்
தளர்ச்சி வாழ்வில் ஏற்படும்போது – அவ்வறிவு
தக்கதொரு ஊன்றுகோலாய் அமையும் !

415. *இழுக்க லுடையுழி ஊற்றுக்கோ லற்றே*
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்

வழுக்கல் நிலத்தில் விழுந்து விடாமல்
வசதியாக நடக்க உதவும் ஊன்றுகோல் போல்
வாழ்க்கையில் இழுக்கல் எனும் பிழை
வாராமல் இருக்க உதவும் ஒழுக்கமுடையார் சொல் !

416. *எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்*
ஆன்ற பெருமை தரும்

நல்ல நல்ல செய்திகளை
நறுக்குத் தெறித்தாற் போல் சிறிதளவே
கேட்டாலும் நிறைவான பெருமையை
கேட்ட அளவிற்கு தந்துயர்த்தும் !

417. *பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்துணர்ந்*
தீண்டிய கேள்வி யவர்

பிழைகளை நுணுகி ஆராயும் கேள்வி ஞானத்தவர்
பிழையாக சில சமயம் பொருள் உணர்ந்தாலும்
பேதைமையுடன் அறியாத்தனமாக
பேசமாட்டார் என்றென்றும் !

418. *கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்*
தோட்கப் படாத செவி

கேள்வி ஞானத்தை சான்றோரிடம்
கேட்டுப் பெற்று துளைக்கப்படாத செவிகள்
கேட்கும் சக்தி இருந்தாலும்
கேளாத செவிட்டுச் செவிகளே !

419. *நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய*
வாயின ராத லரிது

கேட்டுக் கேட்டு நுட்பமான
கேள்வி அறிவு பெறாதவர்கள்
வணக்கத்திற்க் உரிய
வாய்ச்சொற்களை பேசுதற்கு அறியார் !

420. *செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்*
அவியினும் வாழினு மென்

செவியால் கேள்விச் சுவையை உணராமல்
செஞ்சோற்று உணவின் சுவையை வாயால்
உணரும் மனிதர்கள் – வாழ்வில்
உயிரோடு இருந்தும் என்ன ?
உயிர் இல்லாமற் போனால் தான் !என்ன ?